# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.23/2020** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா– 03 ( PW– 03 )** |
| **பெயர்** | :- | **சோமு என்கிற ராமசாமி த/பெ. லட்சுமணன்** |
| **தேதி** | :- | **07–04–2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான் தற்போது வாழப்பாடியில் வசிக்கிறேன் என்றால் சரிதான். அங்கு 15 ஆண்டுகளாக வசிக்கிறேன். கருமாபுரம் காட்டுவளவில் தற்போது என் தாயாரும் சகோதரிகளும் வசிக்கின்றனர்கள் என்றால் என் தாயார் மட்டும் வசிக்கிறார். என் தாயாருக்கு 80 வயதுக்கு அதிகமாக இருப்பதால் என் சகோதரிகளுடன் மேற்சொன்ன முகவரியில் வசிக்கிறார் என்றும் என் தாயார் மட்டும் வசிக்கிறார் என்று இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11.09.1995-ஆம் தேதியன்று நான், என் தகப்பனார், என் தாயார் ஆகிய மூவரும் எங்களுடைய பொது குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள B அட்டவணை சொத்து எனக்கும் A அட்டவணை சொத்து என் தகப்பனாரும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பரிவினை பத்திரத்தில் என் தாயாருக்கு சொத்து எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

என் தகப்பனாருக்கு ஒதுக்கிய A அட்டவணை சொத்துக்களை என் மகள்களுக்கு 09.03.2017-ஆம் தேதியன்று அறுதியாவண கொடையாக கொடுத்து ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே B அட்டவணை சொத்து கொடுக்கப்பட்ட நிலையில் A அட்டவணை சொத்தை என் மகள்களுக்கு கொடையாக கொடுத்தார் என்று நான் சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனார் அவருடைய மனைவிக்கோ மகள்களுக்கோ ஏற்பாடு எதுவும் செய்யாமால் A அட்டவணை சொத்தை என் மகள்களுக்கு அறுதியாவண கொடையாக கொடுத்தார் என்று சொல்வது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

என் மகள்கள் சென்னையில் கணவருடன் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். என் சகோதரிகள் என் தகப்பனாருக்கும் தாயாருக்கும் தேவையான உதவிகளை செய்துவந்த நிலையில் சென்னையில் வசிக்கும் என் மகள்களுக்கு என் தகப்பனார் சொத்து கொடுத்தார் என்று சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. என் மகள்கள் 2021-ஆம் ஆண்டுதான் திருமணம் ஆகி சென்னைக்கு சென்றனர். திருமணத்திற்குமுன் எனது ஒரு மகள் சென்னையில் வேலைசெய்தார் என்றால் இல்லை.

1995-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் என் பெற்றோருக்கு வயதாகிவிட்டதால் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொள்வதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். 1995-ஆம் ஆண்டிலே வயதாகிவிட்ட என் தகப்பனார் 2017-ஆம் ஆண்டில் சுய நினைவுடன் என் மகள்களுக்கு அறுதியாவணம் எழுதி வைத்தார் என்று நான் சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு ஒதுக்கிய சொத்துக்களை அவர் அவருடைய மனைவிக்கும் மகள்களுக்கும் கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது நான் அவரை அவரது வயோதிகத்தை பயன்படுத்தி ஏமாற்றி என் மகள்களின் பெயரில் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

2017-ஆம் ஆண்டு அறுதியாவணம் எழுதப்பட்டபோது அந்த நிலத்தில் 100 தென்னை மரங்களுக்கு அதிகமாக இருந்தது என்றும் பொய்யாக அந்த ஆவணத்தை எழுதியததால்தான் 25 தென்னை மரங்கள் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 2017-ஆம் ஆண்டிற்கு பிறகு நான்தான் அதிக தென்னை மரங்களை நட்டேன்.

எனது திருமணத்திற்குபின் எனது மனைவிக்கும் பெற்றோருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நான் குடும்பத்துடன் வாழப்பாடிக்கு சென்று கடந்த 30 ஆண்டுகளுக்குமேல் அங்குதான் தனியாக வசிக்கிறேன் என்றால் நான் வேலை நிமித்தமாகவும் குழந்தைகளின் படிப்பு நிமித்தமாகவும்தான் வாழப்பாடிக்கு சென்றேன்.

1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் 03-ஆம் பக்கத்தில் இனி வரும் காலத்தில் ஒன்றாம் நபரின் பெண் மக்களுக்கு செய்யவேண்டிய சீர்வரிசைகளை தன் பாகத்தில் இருந்து 01-ஆம் நபரே செய்துகொள்ள வேண்டியது என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான். என் சகோதரிகளுக்கு சீர்வரிசை செய்வதற்காகதான் என் தகப்பனாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

என் திருமணத்திற்குபிறகு நான் என் பெற்றோருக்கு எதுவும் நல்லது செய்யாமல் பொது குடும்ப சொத்தை எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இருந்தவரை அவரை என் தாயாரையும் என் சகோதரிகளும் அவருடைய பிள்ளைகளுமே பாராமரித்து வந்தனர் என்றால் சரியல்ல. என் பெற்றோருக்கான மருத்துவ ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை. என் தாயாருக்கு அவ்வாறான நிலை எதுவும் ஏற்படவில்லை. அயோத்தியபட்டினத்திற்கு அருகில் உள்ள திரு மருத்துவமனையில் என் தாயாருக்கு என் சகோதரிகள் மருத்துவம் பார்த்துள்ளனர் என்றால் சரியல்ல.

என் மகள்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.